பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

ஆசிரியர் அறிமுகம் / 21

முன்னுரை / 25

பகுதி 1: முதல் நோக்கம்:
ஸலஃப் எனும் முன்னோர்களின் மன்ஹஜ் (நடைமுறை) என்பதற்குரிய வரைவிலக்கணம், அதன் அடிப்படைகள், அதைப் பின்பற்றி நடப்பதின் விதிமுறை, அதன் சிறப்பு / 29

1 ஸலஃபீ மன்ஹஜ் ஒரு விளக்கம் / 31

2 ஸலஃபிய்யா எனும் முன்சென்ற நல்லோர்களின் கொள்கைக்கான அடிப்படைகள் / 37

3 முதல் அடிப்படை: அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் எனும் நல்லோர்களான நம் முன்னோர்கள் விளங்கியபடி வேதத்தையும் ஸுன்னாவையும் பின்பற்றி அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே எல்லா வணக்கங்களையும் செய்வதை உறுதிசெய்தல் / 41

4 இரண்டாவது அடிப்படை: அல்ஜமாஅத்தோடு இருப்பதும் ஆட்சியாளர்களின் சொல் கேட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் / 44

5 மூன்றாவது அடிப்படை: பித்அத்தான கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளைவிட்டும், பித்அத்வாதிகளைவிட்டும் தவிர்ந்திருத்தல் / 72

6 ஸலஃபீ (மன்ஹஜ்) வழிமுறையைப் பின்பற்றுவதின் சட்டம் / 80

7 ஸலஃபின் வழிமுறையைப் பின்பற்றி நடப்பதின் சிறப்புகள் / 82

பகுதி 2: இரண்டாவது நோக்கம்:
ஸலஃபிய்யத்தின் பல குணாதிசயங்கள் / 85

1 முதல் குணாதிசயம்: நபியைப் பின்பற்றுவதை மட்டுமே அளவுகோலாக வைத்துத்தான் அவர்கள் யாரிடமும் (அல்வலா வல் பரா எனும்) நெருக்கம் கடைப்பிடிப்பார்கள்; வெறுத்து விலகி இருப்பார்கள். / 87

2 இரண்டாவது குணாதிசயம்: நபியவர்களைப் பின்பற்றி நடப்பதே அவர்களின் அடையாளமாகும் / 91

3 மூன்றாவது குணாதிசயம்: அனைத்துக் காரியங்களிலும் நடுநிலையைப் பேணி நடப்பார்கள் / 98

4 நான்காவது குணாதிசயம்: அவர்கள் அன்பு மிக்கவர்களாகவும் ஒற்றுமை மிக்கவர்களாகவும் இருப்பார்கள். சத்தியத்தின்மீது உறுதியோடும் இருப்பார்கள். / 106

5 ஐந்தாவது குணாதிசயம்: மார்க்கக் கல்வியைத் தேடுவதன் மூலம் மார்க்கத்தை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருப்பார்கள். / 121

பகுதி 3: மூன்றாவது நோக்கம்: அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஆவின் பார்வையில் சீர்திருத்தம் செய்தல் / 149

1 மாற்றமும் சீர்திருத்தத்தின் தேவையும் / 151

2 முதல் விதி: சீர்திருத்தத்தின் முதல் அடிப்படை அல்லாஹ்வையே வணங்குவதும் அவனை ஏகத்துவப்படுத்துவதுமே / 155

3 இரண்டாவது விதி: தனிநபரிலிருந்தே சீர்திருத்தம் ஏற்படும். ஒட்டுமொத்த சமூகத்திலிருந்தோ ஆட்சியாளரிடமிருந்தோ மற்றவர்களிடமிருந்தோ ஏற்பட்டுவிடாது. ஒவ்வொருவரும் முதலில் தன்னைத் திருத்தவே ஆரம்பிக்க வேண்டும். தன்னைத் திருத்திக்கொண்டு அடுத்தடுத்து நெருக்கமாக உள்ளவர்களைத் திருத்த ஆரம்பிக்க வேண்டும். / 161

4 மூன்றாவது விதி: சொல்வதற்கும் செயல்படுவதற்கு முன்னால் அறிந்துகொள்ளுதல் / 164

5 நான்காவது விதி: அவருடைய கல்வியறிவு அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் எனும் நல்ல முன்னோர்கள் காட்டித்தந்த வழியில் இருக்க வேண்டும். / 168

6 ஐந்தாவது விதி: குர்ஆன் வசனங்களிலும் நபிமொழிகளிலும் ஸலஃபின் நடைமுறை வாழ்க்கையிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ள பல்வேறு பண்புகளை அழைப்புப்பணியின்போது அலங்கரிக்க வேண்டும். / 170

முடிவுரை / 176

1

ஸலஃபீ மன்ஹஜ் ஒரு விளக்கம்

❀

மன்ஹஜ் (مَنْهَجٌ) என்ற அறபி வார்த்தைக்கு 'தெளிவான பாதை' என்பது சொற்பொருளாகும். நாம் இங்கு அந்த வார்த்தையைப் பயன்படுத்துவதன் நோக்கம் யாதெனில், ஏதாவது ஒரு விசயத்தை அறிவதற்காக வேண்டி நடைபோடுகிற தெளிவான வழிமுறையைக் குறிப்பதற்காக ஆகும்.

அறபுமொழியில் ஸலஃபீ (سَلَفِيٌّ) என்ற சொற்பதம் ஸலஃப் (سَلَفٌ) என்ற வார்த்தையோடு இணைக்கப்பட்டது. உங்களுடைய முன்சென்ற மூதாதையர்கள் மற்றும் உறவினர்கள் அனைவருமே உங்களுடைய ஸலஃப் ஆவர். இதன் பன்மை ஸுல்லாஃப் (سُلَّافٌ), அஸ்லாஃப் (أَسْلَافٌ) போன்ற வார்த்தைகள் ஆகும். அல்கவ்முல் ஸுல்லாஃப் (اَلْقَوْمُ السُّلَّافُ) என்றால் முன் சென்றுவிட்ட மக்கள் எனப் பொருள்படும்.

ஸலஃபீ எனும் வார்த்தையால் தன்னை வருணித்துக் கொள்வதற்கு முந்திய அறிஞர்களிடமிருந்து ஓர் உதாரணத்தைக் குறிப்பிடலாம். அப்துற் றஹ்மான் இப்னு அப்தில்லாஹ் அஸ்ஸலஃபீ அவர்கள் ஒரு பிரபலமான முஹத்திஸ் - ஹதீஸ் துறை அறிஞர். ஹிஜ்ரீ 576இல் மரணித்தவர். இன்னும் மற்றவர்கள் பலரும்கூட இந்த வார்த்தையின் மூலம் தங்களை ஸலஃபீ என்று அடையாளப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாக நாடப்படும் கருத்து என்னவென்றால், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் நபித்தோழர்களும் அந்தத் தோழர்களை மனத்தூய்மையில் பின்பற்றி நடந்தவர்களும் எந்த வழிமுறைப்படி நடந்து காட்டினார்களோ அந்த வழிமுறையைப் பின்பற்றுபவர் என்பதுதான்.

ஆக ஸலஃபீ மன்ஹஜ்ஜு என்பது: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களும் அவர்களுடைய தோழர்களும் காட்டிச் சென்ற

2

ஸலஃபிய்யா எனும் முன்சென்ற நல்லோர்களின் கொள்கைக்கான அடிப்படைகள்

❀

ஸலஃபிய்யாவின் அடிப்படைகள் மூன்றாகும். அவை:

الْأَصْلُ الْأَوَّلُ: إِخْلَاصُ الْعِبَادَةِ للهِ سُبْحَانَهُ وَتَعَالَى

முதல் அடிப்படை: அல்லாஹ்விற்காக மட்டுமே தூய மனதுடன் வணக்கவழிபாடு புரிவது.

الْأَصْلُ الثَّانِي: لُزُوْمُ الْجَمَاعَةِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ

இரண்டாவது அடிப்படை: ஜமாஅத்தோடு ஒன்றிணைந்திருப்பது. ஆட்சித் தலைவரின் பேச்சைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பது.

الْأَصْلُ الثَّالِثُ: الْحِذْرُ مِنَ الْبِدَعِ وَالْمُبْتَدِعِيْنَ

மூன்றாவது அடிப்படை: பித்அத்தான கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளைவிட்டும், பித்அத்வாதிகளைவிட்டும் தவிர்ந்து இருப்பது.

இந்த அடிப்படைகளுக்குப் பல ஆதாரங்கள் வந்துள்ளன. அவற்றில் சிலவற்றைக் கீழே காண்போம். இர்பாள் இப்னு சாரியா ﷺ அறிவிக்கிறார்கள்:

وَعَظَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمًا بَعْدَ صَلَاةِ الغَدَاةِ مَوْعِظَةً بَلِيغَةً ذَرَفَتْ مِنْهَا العُيُونُ وَوَجِلَتْ مِنْهَا القُلُوبُ، فَقَالَ رَجُلٌ: إِنَّ هَذِهِ مَوْعِظَةُ مُوَدِّعٍ فَمَاذَا تَعْهَدُ إِلَيْنَا يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ: "أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ، وَإِنْ عَبْدٌ حَبَشِيٌّ، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ يَرَى اخْتِلَافًا كَثِيرًا، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الأُمُورِ فَإِنَّهَا ضَلَالَةٌ فَمَنْ أَدْرَكَ ذَلِكَ مِنْكُمْ فَعَلَيْهِ بِسُنَّتِي وَسُنَّةِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ، عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ

3

الْأَصْلُ الْأَوَّلُ
تَحْقِيْقُ الْعُبُوْدِيَّةِ لِلهِ سُبْحَانَهُ وَتَعَالَى بِاتِّبَاعِ الْكِتَابِ وَالسُّنَّةِ عَلَى وَفْقِ فَهْمِ السَّلَفِ الصَّالِحِ

முதல் அடிப்படை:
அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் எனும் நல்லோர்களான நம் முன்னோர்கள் விளங்கியபடி வேதத்தையும் ஸுன்னாவையும் பின்பற்றி அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே எல்லா வணக்கங்களையும் செய்வதை உறுதிசெய்தல்

❀

அல்லாஹ் அல்லாதவர்களைத் தவிர்த்துவிட்டு அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும். ஷரீஅத்தில் கூறப் பட்டபடி வணக்கம் புரிய வேண்டும். இதுதான் கலிமத்துல் இஹ்லாஸுடைய உண்மை நிலையாகும். அந்தக் கலிமா அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்[5] வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ (வணக்கத்துக்குரிய

5 லா இலாஹ இல்லல்லாஹ் (لَا إِلَٰهَ إِلَّا اللهُ) என்பது இஸ்லாமிய ஓரிறைக் கொள்கையின் உறுதிமொழியாகும். வணங்கப்படுவதற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை (لَا مَعْبُوْدَ بِحَقٍّ إِلَّا اللهُ) என்பது இதன் பொருள். இதை மனதால் உறுதியாக நம்பி, நாவினால் சாட்சி கூறினால்தான் ஒருவர் முஸ்லிமாக முடியும். லா இலாஹ (எதுவும் வணக்கத்திற்குரியது அல்ல) என்ற சொல்லால் மக்கள் வணங்கி வரும் அனைத்தும் மறுக்கப்படுகிறது. இல்லல்லாஹ் (அல்லாஹ் தவிர) என்ற சொல்லால் அல்லாஹ் மட்டும்தான் வணக்கங்களுக்கு உரியவன் என்று உறுதிசெய்யப்படுகிறது. இவ்விரண்டு தூண்களின்மீதே இந்த நம்பிக்கைப்

4

الْأَصْلُ الثَّانِي
لُزُومُ الْجَمَاعَةِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ لِوُلَاةِ الْأَمْرِ

இரண்டாவது அடிப்படை:
அல்ஜமாஅத்தோடு இருப்பதும்
ஆட்சியாளர்களின் சொல் கேட்டு
அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்

❀

அல்ஜமாஅத்தோடு இருக்க வேண்டும். இஸ்லாமிய ஆட்சி யாளர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியான முறையில் செய்து வரவேண்டும். அவற்றில் மிக முக்கியமான தும் கவனிக்க வேண்டியதும் என்னவெனில், அவர்களின் சொல்லைக் கேட்டு அவற்றுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகும். ஆனால், அவர்கள் பாவகாரியத்தை ஏவினால் அவற்றுக்குக் கட்டுப்படத் தேவையில்லை. அல்லாஹ் தஅலா கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ مِنْكُمْ فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللَّهِ وَالرَّسُولِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ ذَلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல் லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடங்கள். (அதுபோலவே அல்லாஹ்வின்) தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். மேலும், உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். ஏதேனும் ஒரு விசயத்தில் உங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டால், உண்மையாகவே நீங் கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பிக்கை கொண்

5

الْأَصْلُ الثَّالِثُ
الْحَذْرُ مِنَ الْبِدَعِ وَالْمُبْتَدِعِيْنَ

மூன்றாவது அடிப்படை:
பித்அத்தான கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளைவிட்டும், பித்அத்வாதிகளைவிட்டும் தவிர்ந்திருத்தல்

❀

பித்அத்துகளையும் பித்அத்வாதிகளையும் ஸலஃப் எனும் முன்னோர்கள் தவிர்ந்து நடந்துகொண்டார்கள். ஏனென்றால், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் இவற்றைக் குறித்து எச்சரிக்கை செய்தவாறே இருந்துள்ளார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الأُمُورِ فَإِنَّهَا ضَلاَلَةٌ فَمَنْ أَدْرَكَ ذَلِكَ مِنْكُمْ فَعَلَيْهِ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ

நவீன அனுஷ்டானங்களை விட்டும் உங்களை எச்சரிக்கி றேன். ஏனெனில், அவை வழிகேடாகும். உங்களில் யார் அதை அடைந்து கொண்டாரோ அவர் எனது வழிமுறையை யும் நேர்வழி காட்டப்பெற்ற, நேர்வழி அடைந்த கலீஃ பாக்களின் நடைமுறையையும் கடைப்பிடியுங்கள். அவற் றை (உங்கள்) கடைவாய்ப் பற்களால் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். (ஜாமிவுத் திர்மிதீ 2676, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 37)

மட்டுமன்றி, அடுத்தவர்களுக்கு நன்மை பயக்கும்படியான நற்காரியங்களைச் செய்வதன் மூலம் பித்அத்துகளை மறுத்தோ

1

السِّمَةُ الْأُوْلَى

مَحَلُّ الوَلَاءِ وَالْبَرَاءِ عَنْدَهُمُ اتِّبَاعِ الرَّسُوْلِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

முதல் குணாதிசயம்:
நபியைப் பின்பற்றுவதை மட்டுமே
அளவுகோலாக வைத்துத்தான் அவர்கள்
யாரிடமும் [அல்வலா வல் பரா எனும்]
நெருக்கம் கடைப்பிடிப்பார்கள்;
வெறுத்து விலகி இருப்பார்கள்.

❀

ஸலஃபீகள் ஒருக்காலும் ஹிஸ்பிய்யா (الْحِزْبِيَّةُ) அடிப்படையில், அதாவது இயக்கவெறியால் உருவாகும் பிரிவினைவாதத்தின் அடிப்படையில் செயல்படமாட்டார்கள். அவர்கள் ஒருவர் இன்னொருவருடன் அல்வலா எனும் நெருக்கம் கடைப்பிடிப்பதாக இருந்தாலும், அல்பரா எனும் வெறுத்து விலகி இருப்பதாக இருந்தாலும் அது குர்ஆன் மற்றும் ஸுன்னாவை மட்டுமே அடிப்படையாகக்கொண்டிருக்கும். இதைத் தவிர்த்து வேறு எந்தப் புத்தகத்தையோ, கட்சி, இயக்கம், அமைப்பையோ, தனிமனிதனையோ அளவுகோலாகக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களைத் தவிர்த்து வேறு யாரையாவது பின்பற்ற தகுந்தவராக ஆக்கிக் கொண்டவர்கள் பிரிவினைவாதிகளே ஆவர்.

இந்தச் சமூகம் 73 பிரிவினராகப் பிரிவர் என்பது குறித்த ஹதீஸ் பற்றி இப்னு தைமிய்யா ؒ அவர்கள் பேசும்போது பின்வருமாறு கூறுகிறார்கள்: 72 பிரிவினர்களைப் பற்றி மக்கள்

1

மாற்றமும் சீர்திருத்தத்தின் தேவையும்

❀

மாற்றம் ஏற்படுவது அல்லாஹ் தன் படைப்பிலே ஏற்படுத்துகிற நடைமுறையாகும். இர்பாள் இப்னு சாரியா ﵀ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

وَعَظَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمًا بَعْدَ صَلَاةِ الغَدَاةِ مَوْعِظَةً بَلِيغَةً ذَرَفَتْ مِنْهَا العُيُونُ وَوَجِلَتْ مِنْهَا القُلُوبُ، فَقَالَ رَجُلٌ: إِنَّ هَذِهِ مَوْعِظَةُ مُوَدِّعٍ فَمَاذَا تَعْهَدُ إِلَيْنَا يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ: "أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ، وَإِنْ عَبْدٌ حَبَشِيٌّ، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ يَرَى اخْتِلَافًا كَثِيرًا، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الأُمُورِ فَإِنَّهَا ضَلَالَةٌ فَمَنْ أَدْرَكَ ذَلِكَ مِنْكُمْ فَعَلَيْهِ بِسُنَّتِي وَسُنَّةِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ، عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ

(ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் காலைத் தொழுகைக்குப் பின்பு எங்களுக்கு அறிவுரை கூறினார்கள். அதைக் கேட்டு (எங்கள்) கண்கள் கண்ணீரைப் பொழிந்தன. அந்த உரை எங்கள் உள்ளங்களை நடுங்கச் செய்தது. அப்போது நாங்கள், 'அல்லாஹ்வின் தூதரே! இது (உலகிலிருந்து) விடை பெற்றுச் செல்லும் ஒருவரின் அறிவுரை போன்றுள்ளதே? எங்களிடம் என்ன உறுதிமொழி கேட்கிறீர்கள்?' என்று வினவினோம்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், 'அல்லாஹ்வை அஞ்சி நடக்க வேண்டும் என்றும், (உங்களின் ஆட்சியாளர்) அபிசீனிய கறுப்பு அடிமையாக இருந்தாலும் சரியே, ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிந்து செயல்பட வேண்டும் என்றும் உங்களுக்கு உபதேசிக்கிறேன். உங்களில் எனக்குப் பிறகு உயிருடன் வாழ்பவர் ஏராளமான கருத்துவேறுபாடுகளைக் காண்பார். நவீன அனுஷ்டானங்களை விட்டும்

4

الضَّابِطُ الثَّالِثُ
الْعِلْمُ قَبْلَ الْقَوْلِ وَالْعَمَلِ

மூன்றாவது விதி:
சொல்வதற்கும் செயல்படுவதற்கு முன்னால் அறிந்துகொள்ளுதல்

❀

இமாம் புகாரீ ﵀ அவர்கள் கல்வி என்ற அத்தியாயத்தில் இவ்வாறு ஒரு பாடத் தலைப்பைக் கொண்டு வந்துள்ளார். 'சொல்வதற்கும் செயல்படுவதற்கும் முன்னால் அறிந்துகொள்ளுதல்' எனும் இந்தத் தலைப்பைப் பின்வரும் வசனத்தின் அடிப்படையில் கொண்டுவந்துள்ளார். அல்லாஹ் கூறுகிறான்:

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ

(நபியே!) நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறோர் இறைவன் இல்லவே இல்லை என்பதை நீர் உறுதியாக அறிந்துகொள்வீராக.' (குர்ஆன் 47:19)

இங்கே அறிந்துகொள்வதைப் பற்றி முதலில் கூறியுள்ளான்.

وَأَنَّ الْعُلَمَاءَ هُمْ وَرَثَةُ الأَنْبِيَاءِ - وَرَّثُوا الْعِلْمَ - مَنْ أَخَذَهُ أَخَذَ بِحَظٍّ وَافِرٍ

நிச்சயமாக அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகளாவார்கள். அவர்கள் அறிவைத்தான் விட்டுச் சென்றுள்ளார்கள். இந்த அறிவைப் பெற்றவரே நிறைய பாக்கியம் பெற்றவராவர்.

وَمَنْ سَلَكَ طَرِيقًا يَطْلُبُ بِهِ عِلْمًا سَهَّلَ اللَّهُ لَهُ طَرِيقًا إِلَى الْجَنَّةِ

'கல்வியைத் தேடி ஒருவர் ஒரு வழியில் சென்றால் அவருக்குச் சுவர்க்கத்திற்குச் செல்லும் வழியை அல்லாஹ் இலகுவாக்குகிறான்.'